5th February 1959]

Temple lands

* 41 Q.—Sri C. MUTHIAH : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லாவில் தர்ம ஸ்தாபனங்களில் உள்ள ஆதின கோயில் நிலங்களைக் குத்தகைக்கு விடாமல் நேரடி சாகுபடியாளருக்குக் கொடுக்க அரசாங்கம் உத்தரவிட உத்தேசம் உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No, Sir.

Sri C. MUTHIAH : இந்தப் பிரச்னை முக்கியமான பிரச்னையாக இருந்து வருவதால், இந்த வருட ஆரம்பத்திலேயே குத்தகை கொடுக்க வேண்டியதை நேரடியாக விவசாயிகளுக்கே கொடுத்தால் வருங்காலத்தில் நாம் கொண்டு வரப்போகும் சீர்திருத்தத்திற்கும் மிக ஆதரவாக இருக்கும். ஆகவே இந்த விஷயத்தைப்பற்றி கூடுதலாக விவாதிக்க அரை மணி நேரம் ஒதுக்கித்தர வேண்டும் என்று தலைவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப்பற்றியும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதற்கான சட்டம் கொண்டு வருகிற சமயத்தில் அதற்குத்தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

DEPUTY SPEAKER : The hon. Member has got an opportunity to speak about this during the discussion on the Governor's Address.

Hides and skin market

* 42 Q.—Sri V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

ஆட்டுத்தோல், மாட்டுத்தோல் விற்பனை மார்க்கெட், லண்டனில் இருப்பதை சென்னையிலேயே வைத்து நடத்துவதற்கான ஏற்பாடு செய்யும் படி மத்திய சர்க்காரை சென்னை சர்க்கார் கேட்டுள்ளதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir. The matter is under consideration.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், நூற்றுக்கு 90 சதவிகிதம் வருமானம் கிடைக்கக்கூடிய டானரி மார்க்கெட் இப்போது லண்டனில் இருந்து வருகிறது. இந்த மார்க்கெட்டை சென்னையில் ஏற்படுத்தினால் அரசாங்கத்திற்கு சுமார் 5 கோடி ரூபாய் வரை வருமானம் வரும் என்றும் தெரிகிறது. ஆகவே இந்த மார்க்கெட்டை சென்னையில் ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு நமது அரசாங்கம் வற்புறுத்துமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதில் சர்க்காருக்கு வருமானம் வருமா அல்லது வராதா என்பது முக்கியப் பிரச்னை அல்ல. நமது நாட்டில் கிடைக்கின்ற தோல்கள் அதிகமாக வெளிநாடுகளில் விற்பனை ஆகவேண்டும். வெளி நாடுகளில் விற்பனை ஆகவேண்டுமென்றால் அதற்கு ஏலம் போடக் கூடிய இடம் வெளிநாட்டில்தான் இருந்தாகவேண்டியிருக்கிறது. இதைப்பற்றியும் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி இரண்டு விதமான அபிப்பிராயம் இருந்து வருகிறது. The Principal of the Institute of Leather Technology இவை உற்பத்தி செய்யப்படுகின்ற இடத்தில் மார்க்கெட் இருப்பது நல்லது என்றும், the Director of the Central Leather Research Institute லண்டனில் இருந்தால் தான் தோல் நல்ல முறையில் வியாபாரம் ஆகும் என்றும் அபிப்ராயப்படுகிறார்கள். அதோடு லண்டனில் இருக்கின்ற இந்திய ஹை கமிஷனர் அவர்களிடத்தில் அபிப்பிராயம் கேட்டதில் லண்டனில்